بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

# பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபாக்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 20 செப்டம்பர் 2019 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

பத்ரி சஹாபாக்களின் குறிப்பில் இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற முதலாவது சஹாபியின் பெயர் ஹஸ்ரத் யஸீது பின் ருகைஷ் ஆவார்கள். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் யஸீது அவர்கள் பத்ர் போர் நாளன்று தே கோத்திரத்தைச் சார்ந்த அம்ர் பின் சுஃப்யானைக் கொன்றார்கள். ஹஸ்ரத் யஸீது அவர்கள் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு யமாமா போரில் ஷஹீதானார்கள்.

யமாமா போர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்தப் போர் முஸைலமா கத்தாபிற்கு எதிராக யமாமா என்ற இடத்தில் நடைபெற்றது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் இக்ரிமா பின் அபூஜஹலின் தலைமையில் ஒரு படையை முஸைலமா கத்தாபிற்கு எதிராக போர் செய்வதற்காக அனுப்பினார்கள். இவர்களுக்குப் பின்னால் இவர்களுக்கு உதவி செய்வதற்காக ஹஸ்ரத் ஷர்ஹபீல் பின் ஹஸனா அவர்களின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார்கள். ஏதோவொரு காரணமாக ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஷர்ஹபீல் வந்தடைவதற்கு முன்பே முஸைலமாவுடன் போர் செய்யத் தொடங்கினார்கள். ஆனால் முஸைலமாவுடன் அவர்களுக்கு தோல்வி ஏற்பட்டது. ஹஸ்ரத் இக்ரிமா அவர்கள் இந்த செய்தியை ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்கு எழுதினார்கள். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் இக்ரிமா (ரலி) அவர்களுக்கு எழுதினார்கள்: நீங்கள் மதீனா திரும்பி வர வேண்டாம். மக்களிடம் கோழைத்தனம் ஏற்பட்டு விடாமல் இருப்பதற்காக நீங்கள் மதீனாவிற்கு திரும்பி வரவும் கூடாது. மாறாக, நீங்கள் உங்களது படையை அழைத்துக் கொண்டு உமானைச் சார்ந்தவர்கள் மற்றும் மஹ்ராவின் கிளர்ச்சியாளர்களுடன் போர் செய்யுங்கள். இதற்குப் பிறகு யமன் மற்றும் ஹஸர்மவ்த்தின் கிளர்ச்சியாளர்களுடன் சென்று போர் செய்யுங்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் ஷர்ஹபீல் அவர்களுக்கு எழுதினார்கள். அதாவது நீங்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்கள் வரும் வரை அங்கேயே தங்கி இருங்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்களை முஸைலமா கத்தாபிற்கு எதிராக போர் செய்வதற்காக அனுப்பினார்கள். மேலும் அவர்களுடன் அன்ஸார் மற்றும் முஹாஜிரீன்களின் ஒரு பெரும் படையை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் அவர்கள் அன்ஸார்களின் படைக்கு தலைவராகவும், மேலும் ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா அவர்களும், ஹஸ்ரத் ஸைது பின் கத்தாப் அவர்களும் முஹாஜிரீன்களின் படைக்கு தலைவர்களாகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் ஷர்ஹபீல் அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்கள் வருவதற்கு முன்பாகவே முஸைலமாவுடன் போர் செய்யத் தொடங்கினார்கள். மேலும் தோல்வியுற்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் காலித் அவர்களுக்காக ஹஸ்ரத் சலீது அவர்களின் தலைமையில் ஒரு படையை மேலும் அனுப்பினார்கள். ஏனென்றால் இவர்கள் மீது பின்னாலிருந்து எவரும் தாக்குதல் நடத்தி விடக்கூடாது என்பதற்காக இந்தப் படையை அனுப்பினார்கள். இந்தப் போரில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 13000 ஆக இருந்தது. ஆனால் முஸைலமாவின் படையின் எண்ணிக்கை 40000 ஐ விட அதிகமாக இருந்தது என்று கூறப்படுகிறது.

முஸைலமாவிற்கு ஹஸ்ரத் காலித் அவர்கள் அருகில் வந்து விட்டார்கள் என்பது தெரிய வந்தபோது அவன் உக்ரபா என்ற இடத்தில் தமது தங்குமிடத்தை அமைத்தான். மேலும் மக்களை தமது உதவிக்காக அழைத்தான். பெரும் எண்ணிக்கையில் மக்கள் அவன் பக்கம் வரத் தொடங்கினர். அப்போது முஜாஆ பின் முராரா ஒரு படையுடன் வெளியே வந்தபோது முஸ்லிம்கள் அவனையும் அவனது படையையும் பிடித்தார்கள். ஹஸ்ரத் காலித்

அவர்கள் அவனுடன் வந்தவர்களை கொன்று விட்டார்கள். மேலும் முஜாஆவை உயிருடன் வைத்திருந்தார்கள். ஏனென்றால் பனு ஹனீஃபீவின் கோத்திரத்தில் இவனுக்கு மிகப்பெரும் கண்ணியம் இருந்தது. முஜாஆ பிடிக்கப்பட்ட பிறகு முஸைலமாவின் மகன் ஷர்ஹபீல் பனூ ஹனீஃபாவைத் தூண்டியவாறு, இன்று தைரியத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய நாளாகும் என்று கூறினான். மேலும் இவ்வாறு கூறினான்: நீங்கள் இன்று தோல்வியடைந்து விட்டால் பிறகு உங்களது பெண்கள் அடிமையாக்கப்படுவார்கள். எனவே நீங்கள் உங்களது கண்ணியத்திற்காக முழுமையாக தைரியத்தை வெளிப்படுத்துங்கள். மேலும் உங்களது பெண்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். எவ்வாறிருப்பினும் போர் நடைபெற்றது. முஹாஜிரீன்களின் கொடி ஹஸ்ரத் சாலிம் மவ்லா ஹுஸைஃபா அவர்களிடம் இருந்தது. ஆனால் இதற்கு முன்பாக அப்துல்லாஹ் பின் ஹஃப்ஸிடம் இந்த கொடி இருந்தது. ஆனால் அவர் ஷஹீதாக்கப்பட்டார். மேலும் அன்ஸார்களின் கொடி ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் அவர்களிடம் இருந்தது.

எத்தகைய போர் நடைபெற்றதென்றால் இதற்கு முன்பு இதைப் போன்ற போரை முஸ்லிம்கள் எதிர்கொள்ள வேண்டியது வந்ததில்லை. இந்தப் போரில் முஸ்லிம்கள் தோல்வியுற்றனர். மேலும் பனூ ஹனீஃபாவைச் சேர்ந்தவர்கள் ஹஸ்ரத் காலித் அவர்களால் கைது செய்யப்பட்ட முஜாஆவை விடுவிப்பதற்காக முன்னேறி வந்தனர். அவர்கள் காலித் அவர்கள் இருந்த கூடாரத்தின் பக்கம் சென்றனர். அப்போது அங்கு ஹஸ்ரத் காலித் அவர்களின் மனைவி கூடாரத்தில் இருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் காலித் அவர்களின் மனைவியை கொல்ல விரும்பியபோது முஜாஆ, நான் அவருக்கு அடைக்கலம் கொடுத்துள்ளேன் என்று கூறி அவர்களை கொலை செய்வதிலிருந்து தடுத்தார்கள். ஆண்களை கொலை செய்யுமாறு முஜாஆ கூறினான். எனவே அவர்கள் கூடாரத்தை வெட்டிவிட்டுச் சென்றனர். இதற்குப் பிறகு போர் கடுமையாக நடைபெற்றது. மேலும் பனூ ஹனீஃபாவைச் சார்ந்தவர்களும் இணைந்து கடுமையாக தாக்குதல் தொடுக்க முற்பட்டனர். சில நேரங்களில் முஸ்லிம்களும், சில நேரங்களில் நிராகரிப்பாளர்களும் பெற்றி பெறும் நிலைமை இருந்தது.

இந்தப் போரில் ஹஸ்ரத் சாலிம், ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா, ஹஸ்ரத் ஸைது பின் கத்தாப் போன்ற கண்ணியமிக்க சஹாபாக்கள் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் காலித் அவர்கள் முஸ்லிம்களின் இந்த நிலையைக் கண்டபோது, மேலும் முஸ்லிம்களின் மீது எங்கிருந்து தாக்குதல் தொடுக்கப்படுகிறது என்பதை அறிந்து கொள்வதற்காக அன்னார் ஒவ்வொரு கோத்திரத்தைச் சார்ந்தவர்களையும் தனித்தனியாக செல்லுமாறு கட்டளையிட்டார்கள். அதே போன்று போரில் வரிசையையும் தனித்தனியாக சரி செய்தார்கள். அப்போது முஸ்லிம்கள் ஒருவர் மற்றவரிடம், இன்றைய நாளில் நமது நிலையைப் பார்த்து நமக்கு மிகவும் வெட்கமாக இருக்கிறது. முஸ்லிம்களுக்கு இந்நாளை விட மிகவும் கஷ்டமான நாள் வேறொன்றுமில்லை என்று கூறினர்.

முஸைலமா தற்போது வரை தமது இடத்திலேயே இருந்தான். மேலும் நிராகரிப்பாளர்களே போர் செய்து வந்தார்கள். இது பற்றி காலித் அவர்களுக்கு தெரிய வந்ததும், எப்போது வரை அவனைக் கொலை செய்யவில்லையோ அப்போது வரை போர் முடிவடையாது என்பதை அன்னார் உணர்ந்தார்கள். எனவே ஹஸ்ரத் காலித் அவர்கள் முன்னேறிச் சென்றார்கள். மேலும் தனித்துப் போரிட அறைகூவல் விடுத்தார்கள். அப்போது நடைமுறையில் இருந்த யாமுஹம்மது என்ற போர் முழக்கம் செய்தார்கள். யாரெல்லாம் தனித்துப்போரிட வந்தார்களோ அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டார்கள். முஸைலமாவை ஹஸ்ரத் காலித் அவர்கள் அழைத்தார்கள். ஆனால் அவன் வெளியே வரவில்லை. அவன் ஓடிவிட்டான். மேலும் தன்னுடன் இருப்பவர்களுடன் ஒரு தோட்டத்தில் அடைக்கலம் பெறுவதற்கு அவன் நிர்பந்தத்திற்கு ஆளானான். மேலும் தோட்டத்தின் கதவை அடைத்து விட்டான். அப்போது முஸ்லிம்கள் அந்த தோட்டத்தை சுற்றி வளைத்தனர். முஸ்லிம்கள் தோட்டத்திற்குள் நுழைந்தனர். மீண்டும் கடுமையான போர் நடைபெற்றது. வஹ்ஷி அவர்கள் முஸைலமாவைக் கொலை செய்தார்கள். இந்த வஹ்ஷி யார் என்றால் இவர்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையினுடைய சகோதரரான ஹஸ்ரத் ஹம்ஸாவை ஷஹீதாக்கினார்கள்.

இந்தப் போரில் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து மதீனாவின் முஹாஜிரீன்கள் மற்றும் அன்ஸார்களைச் சேர்ந்த 360 நபர்களும், மேலும் மதீனாவைச் சாராத 300 முஹாஜிரீன்களும் ஷஹீதானார்கள். ஆனால் பனூ ஹனீஃபாவைச் சேர்ந்தவர்களில் உக்ரபா மைதானத்தில் 700 நபர்களும், தோட்டத்தில் 7000 நபர்களும், பின்தொடர்ந்து சென்றவாறு 7000 நிராகரிப்பாளர்கள் கொல்லப்பட்டனர்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அடுத்து நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஹ்ரமா ஆகும். அன்னார் ஆரம்ப காலகட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட

சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். அன்னாருக்கு இரண்டு ஹிஜ்ரத் செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. ஒன்று அபிஸீனியாவிற்கும், மற்றொன்று மதீனாவிற்கும் செய்யப்பட்ட ஹிஜ்ரத் ஆகும். அன்னார் பத்ர் மற்றும் அதற்குப் பிறகு நடைபெற்ற அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள். அன்னார் பத்ர் போரில் பங்கு பெற்ற போது அன்னாரது வயது 30 ஆகும். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் யமாமா போரில் அன்னார் ஷஹீதானார்கள். அப்போது அன்னாரது வயது 41 ஆகும். அன்னாரிடம் ஷஹாதத் ஆக வேண்டும் என்ற ஆரவம் மிகுதியாக இருந்தது. எனவே அவர்கள் அல்லாஹ்விடம், எனது உடலின் ஒவ்வொரு பகுதியிலும் இறைவனது வழியில் நான் காயமடைந்திருப்பதைக் காணாத வரை எனக்கு நீ மரணத்தைத் தந்து விடாதே என்று துஆ செய்து வந்தார்கள். எனவே யமாமா போர் நாளன்று அவர்களது உடலின் ஒவ்வொரு இடத்திலும் காயங்கள் ஏற்பட்டது. இதன் காரணமாக இவர்கள் ஷஹீதானார்கள். அன்னார் அதிகமாக இறைவணக்கம் செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். இளமைப் பருவத்திலும் அதிகமாக இறைவணக்கம் செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: யமாமா போரில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஹ்ரமா மற்றும ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபாவின் விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஹஸ்ரத் சாலிம் ஆகியோர் ஒன்றாக இருந்தோம். நாங்கள் மூவரும் சுழற்சி முறையில் ஆடுகளை மேய்த்து வந்தோம். எனவே எந்த நாளில் போர் ஆரம்பமானதோ அன்றைய நாளில் நான் ஆடுகளை மேய்க்க வேண்டியதிருந்தது. நான் ஆடுகளை மேய்த்து விட்டு வந்தபோது, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஹ்ரமா அவர்களை போர்க் களத்தில் காயங்களுடன் விழுந்து கிடப்பதைக் கண்டேன். அவர்கள் என்னிடம், அப்துல்லாஹ் பின் உமர் அவர்களே! நோன்பு வைத்திருந்தவர்கள் இஃப்தார் செய்து விட்டார்களா? என்று கேட்டார்கள். அதற்கு நான் ஆம் என்று கூறினேன். அதற்கு அவர்கள், இந்த கேடயத்தில் சிறிது தண்ணீர் தாருங்கள். அதன் மூலமாக நான் நோன்பு திறக்கட்டும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் தண்ணீர் எடுத்து திரும்பி வந்தபோது அன்னார் மரணித்திருந்தார்கள்.

நான் எடுத்துக் கூற இருக்கின்ற அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அமர் பின் மஃபத் ஆகும். அன்னார் அன்ஸார்களின் அவ்ஸ் கோத்திரத்தின் பனூ ஸிபாயாவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் அமர் பின் மஃபத் அவர்கள் ஹுனைன் போர் நாளன்று நூறு தைரியசாலிகளுடன் இணைந்து போர் செய்த சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். அவர்களது வாழ்வாதாரத்திற்கு அல்லாஹ்வே போதுமானவனாக இருந்தான். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து துணை நின்றார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அடுத்து நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் ஆகும். அன்னார் நுஃமான் பிக் கவ்க்கல் என்றும் அழைக்கப்படுகின்றார்கள்.

அன்னார் நடக்கும்போது நொண்டி நடப்பவர்களாக. அன்னார் அன்ஸார்களின் கஸ்ரஜ் கோத்திரத்தின் பனூ கனத்தை சார்ந்தவர் ஆவார்கள். ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் அவர்கள் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்கள். மேலும் உஹது போரில் ஷஹீதானார்கள். அன்னாரை சஃப்வான் பின் உமைய்யா என்பவன் ஷஹீதாக்கினான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போருக்காக சென்றபோது ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் கூறினார்கள்: யா ரஸூலல்லாஹ் (ஸல்)! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் நிச்சயமாக சுவர்க்கம் செல்வேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அது எப்படி என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நுஃமான் அவர்கள், அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை; மேலும் நீங்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவீர்கள் என்று நான் சாட்சி கூறுகின்றேன். மேலும் நான் சண்டையிலிருந்து ஒருபோதும் ஓடிச் சென்று விட மாட்டேன் என்று கூறினார்கள். இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் உண்மையை உரைத்தீர்கள் என்று கூறினார்கள். எனவே அன்னார் அந்த நாளில் ஷஹீதானார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அவரது துஆவை ஏற்றுக் கொண்டு விட்டான். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கஷ்ஃபின் வடிவில் இதனை வெளிப்படுத்திக் காட்டினான். அன்னார் கூறினார்கள்: அவர் சுவர்க்கத்தில் நடந்து சென்று கொண்டிருப்பதை நான் கண்டேன். மேலும் அங்கு அவர் ஊனமாகவோ, பதற்றமாகவே இருக்கவில்லை.

ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நுஃமான் பின் கவ்க்கல் அவர்கள் பள்ளிவாசலுக்குள் வந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் குத்பா பேருரை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், நுஃமானே! இரண்டு ரக்அத்துகள் சுருக்கமாக தொழுங்கள் என்று கூறினார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இமாம் குத்பா கொடுத்துக் கொண்டிருக்கும்போது உங்களில் ஒருவர் வருவாரேயானால், அவர் இரண்டு ரக்அத்துகளைத் தொழு வேண்டும். மேலும் அந்த இரண்டு ரக்அத்துகளையும் சுருக்கமாக தொழ வேண்டும்.

அடுத்து நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் குபைப் பின் அதீ அன்ஸாரி ஆகும். அன்னார் பத்ர் போரில் பங்கு பெற்றார்கள். இந்தப் போரில் அன்னார் ஹாரிஸ் பின் ஆமிர் என்பவனைக் கொலை செய்தார்கள். பத்ர் போரில் முஹாஜிரீன்களின் பொருட்களை கண்காணிக்கும் பொறுப்பு அன்னாரிடமே இருந்தது. ஹஸ்ரத் குபைப் பின் அதீ அவர்கள் ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டு ரஜீஃ சம்பவத்தில் பங்கு பெற்றார்கள்.

புகாரியில் ரஜீஃ சம்பவம் தொடர்பாக இவ்வாறான விளக்கம் எழுதப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்து நபர்களைக் கொண்ட ஒரு படையை நிலைமைகளை அறிந்து கொண்டு வருவதற்காக அனுப்பி வைத்தார்கள். ஆஸிம் பின் சாபித் அன்ஸாரி அவர்களை இதற்கு அமீராக நியமித்தார்கள். இந்த மக்கள் பஹ்தா என்ற இடத்தை அடைந்ததும் இவர்களைப் பற்றி பனூ லஹ்யானிற்கு எவரோ ஒருவர் தகவல் கொடுத்து விட்டார்.

இதைக் கேட்டு பனூ லஹ்யானின் ஏறக்குறைய 200 அம்பு எய்யும் நபர்கள் வெளியேறினார்கள். இவர்களது காலடியின் அடையாளங்களை வைத்து இவர்களைப் பின்தொடர்ந்தார்கள். ஆஸிம் மற்றும் அவர்களுடன் இருந்தவர்கள் இவர்கள் வருவதைக் கண்டதும் ஒரு குன்றின் மேல் அடைக்கலம் புகுந்தார்கள். அம்மக்கள் இவர்களை சுற்றி வளைத்தார்கள். மேலும் இவர்களிடம், நீங்கள் கீழே இறங்கி வாருங்கள். நீங்கள் சரணடைந்து விடுங்கள். உங்களில் எவரையும் நாங்கள் கொலை செய்ய மாட்டோம் என்று உடன்படிக்கை செய்கின்றோம் என்று கூறினர்.

அதற்கு இந்த படையின் அமீரான ஆஸிம் பின் சாபித் அவர்கள், நான் நிராகரிப்பவர்களின் அடைக்கலத்தில் வந்து மேலிருந்து இறங்கி வர மாட்டேன் என்று கூறினார்கள். பிறகு அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! உமது நபியிடம் எங்கள் தொடர்பாக தகவல் கொடுப்பாயாக.

எனவே அவர்கள் இவர்கள் மீது அம்பு எய்தனர். மேலும் 7 நபர்களுடன் ஆஸிம் அவர்களையும் கொன்று விட்டார்கள். மேலும் மூன்று பேர் இவர்களது உடன்படிக்கையை நம்பி கீழே இறங்கி வந்தார்கள். இவர்களில் குபைப் அன்ஸாரி மற்றும் இப்னு தஸ்னா, மற்றும் இன்னொரு நபர் இருந்தார். இவர்கள் கீழே வந்ததும் நிராகரிப்பவர்கள் இவர்களை கட்டினார்கள். அந்த மூன்றாவது நபர் கூறினார்: இது உங்களது முதலாவது ஏமாற்று வேலையாகும். இறைவன் மீது ஆணையாக! நான் உங்களுடன் வர மாட்டேன். என் முன் ஷஹீதான இவர்களது முன்னுதாரணம் இருக்கின்றது. நான் இங்கு தான் உள்ளேன். என்னை ஷஹீதாக்க வேண்டுமென்றால் ஷஹீதாக்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் அவர்களோ இவர்களை தம்முடன் அழைத்துச் செல்ல முயற்சி செய்தார்கள். ஆனால் இவர்கள் கேட்கவில்லை. எனவே அவர்கள் அன்னாரைக் கொன்று விட்டார்கள். மேலும் குபைப் மற்றும் இப்னு தஸ்னா ஆகியோரைப் பிடித்துக் கொண்டு மக்காவிற்கு கொண்டு சென்று விற்று விட்டார்கள்.

குபைப் அவர்கள் பனூ ஹாரிஸ் பின் அமர் பின் நவ்ஃப்ல் பின் அப்தே மனாஃப் என்பவன் வாங்கினான். குபைப் அவனிடம் கைதியாக இருந்தார்கள்.

ஹாரிஸின் மகள் கூறுகின்றார்: ஹுபைப் அவர்கள் ஒரு நாள் என்னிடம் சவரக்கத்தி கேட்டார்கள். அப்போது என்னை அறியாமல் எனது குழந்தை அவர்களிடம் சென்று விட்டான். அவர்கள் எனது குழந்தையை தமது மடியில் வைத்திருந்தார்கள். நான் பதற்றமடைந்திருப்பதை அவர்கள் எனது முகத்தைப் பார்த்து அறிந்து கொண்டார்கள். அப்போது குபைப் அவர்கள் கூறினார்கள்: நான் இவனை கொன்று விடுவேன் என்று நீ அஞ்சுகின்றாயா? நான் இவ்வாறு செய்யக்கூடியவன் அல்லன். ஹாரிஸின் மகள் கூறுகின்றார்: நான் குபைப் அவர்களை விட சிறந்த ஒரு கைதியை ஒருபோதும் பார்த்ததில்லை.

மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! திராட்சைப் பழத்தின் கொத்து ஒன்று அவர்களது கையில் இருந்தது. அதிலிருந்து அவர்கள் திராட்சைப் பழங்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். மேலும்

அவர்கள் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தார்கள். அந்த நாட்களில் மக்காவில் எந்த பழங்களும் கிடைக்காமல் இருந்தது.

ஹாரிஸின் மகள் கூறுகின்றார்: இது அல்லாஹ்வின் புறமிருந்து குபைப் அவர்களுக்கு கிடைத்த ரிஸ்க் ஆகும். பிறகு இம்மக்கள் குபைப் அவர்களைக் கொலை செய்வதற்காக வெளியே கொண்டு வந்தபோது அன்னார், எனக்கு இரண்டு ரக்அத்துகள் தொழுவதற்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அனுமதி வழங்கியதும் அவர்கள் இரண்டு ரக்அத்துக்களை தொழுதார்கள். மேலும் கூறினார்கள்: நான் பதற்றத்தின் காரணமாகத்தான் தொழுகைக்கான அனுமதியை கேட்டேன் என்று நீங்கள் கருதாமல் இருந்திருந்தால் நிச்சயமாக நான் நீண்ட தொழுகையை தொழுதிருப்பேன். பிறகு அன்னார் இறைவனிடம், அல்லாஹ்வே! இவர்களை ஒவ்வொருவராக நீ அழிப்பாயாக என்று துஆ செய்தார்கள்.

அன்னாரை இவர்கள் ஷஹீதாக்கியபோது அவர்கள் இந்த துஆவை செய்தார்கள். அல்லாஹ்வே! இவர்களை ஒவ்வொருவராக நீ அழித்து விடுவாயாக. பிறகு ஹஸ்ரத் குபைப் அவர்கள் இந்த கவிதையையும் படித்தார்கள். அதாவது நான் முஸ்லிமாக இருக்கின்ற நிலையில் கொல்லப்படுகின்றேன். நான் அல்லாஹ்விற்காக எந்த பக்கம் விழுவேன் என்பதில் எனக்கு கவலையில்லை. நான் விழுவது அல்லாஹ்விற்காகவே ஆகும். அவன் விரும்பினால் துண்டு துண்டாக்கப்பட்ட உடலின் பாகங்களுக்கும் அவனால் பரக்கத் வழங்க முடியும்.

இறுதியில் ஹாரிஸின் மகன் உக்பா ஹஸ்ரத் குபைப் அவர்களை ஷஹீதாக்கினான். மேலும் ஒவ்வொரு முஸ்லிமும் இவ்வாறு கட்டப்பட்டு கொல்லப்படுகின்ற நிலையில் இரண்டு ரக்அத்துகளை தொழ வேண்டும் என்ற விதிமுறையை நிலைநாட்டியது இந்த குபைப் அவர்கள்தான்.

ஹஸ்ரத் குபைப் அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட போது அன்னார் இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! உனது ரஸூல் (ஸல்) அவர்கள் வரை எனது சலாத்தை எட்ட வைப்பதற்கான எந்த வழியும் எனக்கு இல்லை. எனவே நீயே என் தரப்பிலிருந்து பெருமானார் (ஸல்) அவர்களுக்கு சலாத்தை எட்ட வைப்பாயாக.

ஹஸ்ரத் குபைப் அவர்கள் கொல்லப்படுவதற்காக மேடையில் ஏற்றப்பட்டபோது அவர்கள் துஆ செய்தார்கள். அல்லாஹும்ம அஹ்ஸிஹும் அததா வக்துல்ஹிம் பததா அதாவது அல்லாஹ்வே! இவர்களது எண்ணிக்கையை கணக்கிடுவாயாக. மேலும் இவர்களை ஒவ்வொருவராக கொன்று விடுவாயாக என்று துஆவை ஒரு இணை வைப்பவன் கேட்டதும், அவன் அச்சத்தினால் பூமியில் விழுந்து விட்டான். பிறகு இவ்வாறு கூறப்படுகிறது. அதாவது ஒரு வருடம் கழிவதற்குள் பூமியில் விழுந்த இந்த நபரைத் தவிர குபைப் அவர்களைக் கொலை செய்த அந்த அனைவரும் இறந்து விட்டார்கள். எவரும் உயிருடன் இருக்கவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் ஜிப்ராயீல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். மேலும் இந்த சம்பவத்தைப் பற்றி தெரிவித்தார்கள். சஹாபாக்கள் கூறுகின்றார்கள்: அந்த நாளில் பெருமானார் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் கூறினார்கள்: சபை ஒன்று கூடியிருந்தது. அன்னார் அமர்ந்திருந்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வ அலைக்குமுஸ் சலாம் யா குபைப் அதாவது குபைபே! உம்மீது இறைவனின் சாந்தி உண்டாவதாக. மேலும் அன்னார் கூறினார்கள்: குரைஷிகள் அன்னாரைக் கொலை செய்து விட்டார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இப்போது நான் இந்த அறிவிப்பை செய்ய விரும்புகின்றேன். தாரீகே அஹ்மதிய்யத் (அஹ்மதிய்யதின் வரலாறு) துறையைச் சார்ந்தவர்கள் ஒரு website ஐ தொடங்கியுள்ளனர். அது உருது மற்றும் ஆங்கில மொழிகளைக் கொண்டதாகும். இன்ஷா அல்லாஹ் ஜுமுஆவிற்குப் பிறகு நான் இந்த website ஐ லான்ச் செய்வேன்.

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஒரு வருத்தத்திற்குரிய செய்தியாகும். நமது பழைய மிஷனரி சஃபீயுர் ரஹ்மான் குர்ஷீத் சாஹிப் இவர்கள் 16 செப்டம்பர் அன்று தமது 75 வது வயதில் ஹார்ட் அட்டாக்கின் காரமணாக வஃபாத்தாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். அன்னாரது ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன். அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் மவ்லவி குத்ரத்துல்லாஹ் சாஹிப் அவர்களின் மகள்வழி பேரன் ஆவார்கள். அல்லாஹ் இவர்களுடன் கருணையுடனும், பாவமன்னிப்புடனும் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் A.கலீல் அஹ்மது**